## திருநெல்வேலி மாநகராட்சி

**2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்**

1) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 73, நாள் 19.7.2018 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 76, நாள் 26.7.2018 ஆகிய அரசாணைகள் மூலம் 01.04.2018 முதல் அமல்படுத்தப்பட்ட பொது சொத்துவரி திருத்தத்தினை நிறுத்தம் செய்து (withhold) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.4) துறை அரசாணை நிலை எண் 150, நாள் 19.11.2019 தேதியிட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையில் அங்ஙனம் 01.04.2018 முதல் அமல்படுத்தப்பட்ட சொத்துவரி திருத்தத்தின் மீது பொதுமக்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் வணிக சங்கங்கள் போன்ற பல்வேறு தரப்பிலிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளை ஆய்வு செய்யும் வகைக்கு கீழ்க்கண்ட அலுவலர்களை கொண்ட குழு ஒன்று அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

| வ.எண். | பதவியின் பெயர் | குழுவில் வகிக்கும் பதவி |
|---|---|---|
| 1 | அரசு முதன்மைச் செயலர், நிதித்துறை (செலவுகள்) | தலைவர் |
| 2 | நகராட்சி நிர்வாக ஆணையர் | உறுப்பினர் |
| 3 | இயக்குநர், பேரூராட்சிகள் | உறுப்பினர் |
| 4 | ஆணையாளர், சென்னை பெருமாநகராட்சி | உறுப்பினர் |

மேற்படி அலுவலர் குழுவின் அறிக்கை பெற்று, அதன்மீது அரசால் முடிவுகள் எடுக்கும் வரை, 01.04.2018 முதல் மேற்கொள்ளப்பட்ட பொது சொத்துவரி திருத்தத்தினை நிறுத்தி வைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை எண் 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.4) துறை, நாள் 19.11.2019 மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் பதிவிற்கு.

அலுவலக குறிப்பு:

அ) மேற்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.4) துறை, அரசாணை நிலை எண் 150, நாள் 19.11.2019–னை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) மேற்படி அரசாணையில் ஆணையிடப்பட்டவாறு மேலே பொருளில் காணப்படும் விபரப்படி திருநெல்வேலி மாநகராட்சியில் 01.04.2018 முதல் அமலாக்கப்பட்ட பொது சொத்துவரி திருத்தத்தினை அரசிடமிருந்து மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்கவும் மாமன்றம் தீர்மானிக்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண். 40032/2012/ஆர்1, நாள் 20.11.2019–ம் தேதிய சுற்றறிக்கையில் கண்ட அறிவுரைப்படி 01.04.2018 முதல் திருத்தியமைக்கப்பட்ட மண்டலங்கள் (Zones) மற்றும் 2018ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மறுஅளவீடுகளையும் (re-measurement) அரசிடமிருந்து மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்கவும் மாமன்றம் தீர்மானிக்கலாம்.

தீர்மானம் எண் 98

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

2) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி நயினார்குளம் அமைந்துள்ள பகுதிகளில் மேம்படுத்தும் பணிகள் செய்வதற்கு ரூ.1468.00 லட்சத்திற்கு, நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகம் ந.க.எண் 14595/2018/ IHSDP-3, நாள் 13.02.2019–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர், சென்னை

நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண் 25477/2017/DO–1 நாள் 14.06.2019–ன்படி தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின்படியும், முதலாவது அழைப்பில் மேற்படி திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 14/ஸ்மாாட் சிட்டி/2018–19/SCM–ன்படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் மக்கள் குரல் தமிழ் நாளிதழின் அனைத்துப்பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 11.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 16.08.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் அன்று மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் 2வது அழைப்பில் மேற்படி திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 16/ஸ்மாாட் சிட்டி/2018–19/SCM–ன்படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினகரன் தமிழ் நாளிதழின் அனைத்துப்பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 22.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 25.09.2019–ம் தேதியன்று மின்னணு மற்றும் இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஆனால் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தொகுதிக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் தொடர்பாக தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்ததால் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படவில்லை. பின்னர் தேர்தல் நன்னடத்தை விதிகள் தளர்வுக்கு பின்னர் 29.10.2019 –ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டன. இதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், (1) திரு.எஸ்.வேலுசாமி, ஆண்டிப்பட்டி என்ற ஒப்பந்ததாரரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஆவணங்களை இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னாரது விலைப்புள்ளி அட்டவணை 13.11.2019 ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திரு.எஸ்.வேலுசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி நயினாார்குளம் அமைந்துள்ள பகுதிகளில் மேம்படுத்தும் பணிகள் செய்தல் | ரூ.14,05,00,243/– | ரூ.15,24,42,764/– 8.50% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.எஸ்.வேலுச்சாமி, ஆண்டிப்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,24,42,764/– ஆனது மதிப்பீட்டை விட 8.50% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 13.11.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரா் தமது 18.11.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 8.50% அதிகமான விலை விகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளாா். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு திரு.எஸ்.வேலுச்சாமி அவர்கள் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.14,74,55,005/– ஆனது மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக உள்ளதால் இது ஏற்கத்தக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 18.11.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரா் தமது 20.11.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள்,

எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 20.11.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்.வேலுச்சாமி அவர்களின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,74,55,005/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சியில் நயினார்குளம் அமைந்துள்ள பகுதிகளில் மேம்படுத்தும் பணியானது அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 20.11.2019 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,74,55,005/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதி;ன்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1468.00 லட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகரநிறுவனம் 2018–2019–ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 99

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ஒ.பு.அ.எண். 16/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2018–19/SCM)

---

3) அரசாணை (நிலை) எண் 323, நிதி (படிகள்) துறை, நாள் 17.10.2019–ல் தமிழக அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 01.07.2019 முதல் அடிப்படை ஊதியத்தில் 17 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு செய்து பிறப்பித்துள்ள அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 100

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் சி3/7698/2019)

---

4) அரசாணை எண் 327, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 21.10.2019—ல் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அடிப்படை ஊதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் 01.07.2019 முதல் 17 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 101

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் சி3/8022/2019)

---